Sri V. SUBBIAH : சமுதாய நல திட்டம் சம்பந்தமாக கிராமத் தலைவர்கள் கூட்டங்கள் போடுவதால் ஏதாவது விசேஷமான பலன் இருக்கிறதா என்பதைப்பற்றி ஏதாவது ரிப்போர்ட் இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பலன் இருக்கிறது. அதனால்தான் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன.

Police dogs

* 272 *Q.*—**Sri N. K. PALANISAMI :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any scheme for using more and more Police dogs for detecting crimes in this State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There is no definite scheme as such. But the Government have under consideration a proposal to form a dog squad with three dogs at Madurai.

Sri N. K. PALANISAMI : ஒவ்வொரு ஜில்லாவிலும் இம்மாதிரி நாய்களை வைக்க, அதிலும் முக்கியமாக கோயமுத்தூர் போன்ற நகரங்களில் இம்மாதிரியான ஒரு திட்டத்தை வைக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நேற்றே பதில் சொல்லி இருக்கிறேன். இப்படி ஒவ்வொரு இடங்களிலும் வைப்பது என்பது சிரமமாக இருக்கும். ஆனால் மதுரையில் வைக்கவேண்டுமென்ற யோசனை இருந்து வருகிறது என்று சொன்னேன்.

Sri A. A. RASHEED : Sir, have the Government any information as to the number of cases in which the dogs caught the wrong or unwanted persons?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think it is fair on the part of the hon. Member even to accuse the dogs unfairly (Laughter) and particularly these intelligent dogs. So far as my information goes they have traced only the real culprits. But sometimes the clue may not be found by the police and the cases might have proved unsuccessful.

Sri A. GOVINDASAMY : வட ஆற்காடு மாவட்டத்தில் துப்பறியும் நாய் ஒரு கொலைக்கேசில் ஒருவரைக் கண்டு பிடித்துக்கொடுத்தும் அது சம்பந்தமாக இது வரையிலும் அவர் பேரில் கேஸ் போட்டிருப்பதாக தெரியவில்லை. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித்தான் நான் ஆங்கிலத்தில் சொன்னேன். நாயின் மோப்பம் சரியாக இருந்திருக்கலாம். ஆனால் போலீஸ்காரர்களுடைய மோப்பம் சரியானதாய் இல்லாமல் இருந்திருக்கலாம். அது போலீஸ்காரருடைய திறமையைப் பொறுத்திருக்கிறது. அவர்களும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அவர்களால் மேற்கொண்டு "க்ளூ" கண்டு பிடிக்க முடியாமல் இருந்திருக்கலாம்.